**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

# சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை), ஆண்டு III – 2021

# சான்றுச் சட்டமும் குற்றவியல் நடபடிமுறையும்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

பகுதி **I மற்றும் II** இலிருந்து **ஆகக்குறைந்தது ஒரு வினாவுக்கேனும்** விடையளிக்க நீங்கள் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.
மொத்தமாக **மூன்று (03)** வினாக்களுக்கு **மாத்திரம்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

---

## பகுதி I

1) தனது கணவனான ஒலிவர் என்பவரை பிரிந்த பின்னர் வேஜினியா என்பவள் 2 பிப்ரவரி 2021 முதல் தனது 8 வயது மகனான தோமஸுடன் வாழ்ந்து வருகின்றாள். 21 ஜுலை 2021 தினத்தன்று வேஜினியா ஒலிவருக்கு ''நீ எனக்கு ரூபா 50 மில்லியனை தராவிடின் உன் ஊழல் விவகாரங்களை பொலிஸிற்கு அறியப்படுத்துவேன்'' எனக்கூறுவதான மின்னஞ்சல் ஒன்றினை அனுப்பினாள். ஆகஸ்ட் 4ம் திகதி வேஜினியா கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு ஒலிவரின் ஊழல் விவகாரங்கள் தொடர்பான முறைப்பாடொன்றை எழுதியதோடு அதில், ''இவ் இரகசியங்களை வெளிப்படுத்துவதன் மூலமாக நான் பல எதிரிகளை உருவாக்கியுள்ளேன்.'' எனவும் குறிப்பிட்டிருந்தாள். 10 செப்டம்பர் 2021 தினத்தன்று, துப்பாக்கிக் குண்டு காயங்களுடனான வேஜினியாவின் உடல் அவளது தொடர்மாடி வசிப்பிடத்தில் தோமஸினால் கண்டறியப்பட்டது. மூன்று வெற்றுத் துப்பாக்கி ரவைகளும் இறந்த உடலின் அருகே கண்டுபிடிக்கப்பட்டன. தோமஸ் பின்வருமாறு பொலிஸிடம் கூறினான்: ''அம்மா இறந்த அன்றிரவு, அப்பா இருட்டில் திடீரெனத் தோன்றி ''நான் உன் அம்மாவை பிசாசிடம் அனுப்பிவிட்டேன்'' எனக் கூறினார்''. ஒலிவரைப் பொலிஸினால் கண்டுபிடிக்க முடியாதிருந்ததோடு செப்டம்பர் 13ம் திகதி வரை அவனது கையடக்கத் தொலைபேசி செயல்நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. அவன் அடுத்ததினம் பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்து அவன் யால பிரதேசத்திற்கு சென்றதாகவும் அப்பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி செயற்படுவதற்கான அலைசமிக்ஞை (Coverage) இருக்கவில்லை என்றும் விளக்கினான். பொலிஸ் ஒலிவரை கைது செய்ததோடு அவனது துப்பாக்கியினையும் தமது கட்டுக்காவலுக்குள் எடுத்தனர். டென்வர் என்பவரின் வாக்குமூலத்தின்படி ஒலிவர் அடிக்கடி யாலவிலிருந்த டென்வரின் முகாமில் தங்கியிருந்ததோடு, செப்டம்பர் 9 முதல் 13ம் திகதிவரை ஒலிவர் அந்த முகாமில் தங்கி வேட்டையாடுவதிலும் குறிபார்த்தல் பயிற்சியில் ஈடுபடுவதிலும் தனது காலத்தை கழித்திருந்தான். ஒலிவர் தனது வாக்கு மூலத்தில் , ''வேஜினியா பல எதிரிகளை உருவாக்கியிருந்தாள். தோமஸ் அடிக்கடி மாயத்தோற்றங்கள் காண்பது சம்பந்தமாக அவதிப்பட்டிருந்தான். அவன் பிசாசுகள் மற்றும் தேவதைகள் பற்றி முன்னரும் பேசியுள்ளான்.''

வேஜினியாவின் படுகொலை தொடர்பில் ஒலிவர் குற்றஞ்சாட்டப்படின், மேற்போந்த நிகழ்வுகளின் அடிப்படையில் அதன் இயைபானத்தன்மையினை திருத்தப்பட்டவாறான 1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க , சான்றியல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரங்காட்டி விளக்குக.

(100% புள்ளிகள்)

2) சிரிமல் என்பவன் யால வனப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் (FO) சட்ட விரோதமாக மரம் வெட்டுதலுக்காக கைதுசெய்யப்பட்டான். விசாரணையின் போது வனப்பாதுகாப்பு உத்தியோகத்தரான ஜானக என்பவர் சிரிமலிடம், ''மரம் வெட்டுதல் வியாபாரத்தின் சூத்திரதாரி தொடர்பான உண்மையினை நீ கூறிவிடின், நாங்கள் உன்மேல் குற்றச்சாட்டை முன்வைக்க மாட்டோம்'' எனக்கூறினான். ஆயினும் சிரிமல் மௌனமாகவே இருந்தான். பின்னர் சிரிமல் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதோடு, அந்நேரம் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் (ASP) ஜயசேன என்பவர் பொலிஸ் நிலையத்திற்கு வந்திருந்தார். சிரிமல் ASP யிடம், ''சந்தன ஐயா மரம் வெட்டுவதற்காக எனக்கு ஊதியம் அளிக்கிறார். அம்மரக்குத்திகளை சில்வாவிற்கு விற்கிறார்'' எனக்கூறினான். சிரிமலின் இவ்வாக்குமூலத்தின் அடிப்படையில் வனப்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சந்தன மற்றும் சில்வா ஆகியோரைக் கைதுசெய்ததோடு, சில்வாவினுடைய மரக்களஞ்சியசாலையையும் தமது கட்டுக்காவலுக்குள் கொண்டுவந்தனர். கைதுசெய்யப்படும் போது சில்வா பொலிஸிடம், ''நான் குற்றமற்றவன். நான் செய்ததெல்லாமே சந்தன மற்றும் சிரிமலிடம் மரக்குத்திகளை வாங்குவது மட்டுமேயாகும்'' எனக்கூறினான். சிரிமல், சந்தன மற்றும் சில்வா ஆகியோர் நீதவானின் முன்னிலையில் கொண்டுவரப்பட்ட போது, சிரிமல் ''நான் சந்தனவின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மரங்களை வெட்டினேன். சந்தனவும் சில்வாவும் பல்வேறுபட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்'' என வெளிப்படுத்தினான்.

சிரிமல் மற்றும் சில்வா ஆகியோரின் வாக்குமூலங்களின் ஏற்புடைமையினை இலங்கையிலுள்ள பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டு நுணுக்கமாக ஆராய்க.

(100% புள்ளிகள்)

3) பின்வரும் கூற்றுக்களை நுணுக்கமாக ஆராய்க. உங்களது விடையானது சான்றியல் சட்டத்தின் பொருத்தமான அதிகாரங்களால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

a. ''விசேட தொழிற் திறமை'' (1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க , சான்றியல் கட்டளைச்சட்டம் பிரிவு 45) எனும் சொல்லானது தொழில் ரீதியாக பயிற்சிவிக்கப்பட்ட நிபுணர்களுக்கு மட்டும் மட்டுபடுத்தப்பட்டதல்ல. (50% புள்ளிகள்)

**மற்றும்**

b. குற்றவியல் வழக்கு நடபடியில் ஒரு நபரின் குணவியல்பு என்பது அவனது நடத்தையை விளக்குதல் மற்றும் அவனது குற்றவாளியாக அல்லது நிரபராதியாக தீர்மானிப்பதில் அடிக்கடி அவசியமானதொன்றாகும். (50% புள்ளிகள்)

4) 10 ஆகஸ்ட் 2021 தினத்தன்று பாணந்துரை பகுதியில் இடம்பெற்ற கொள்ளை சம்பவத்தில் ஈடுப்பட்ட சந்தேக நபர்களை கண்டுப்பிடிப்பதற்காக 12 ஆகஸ்ட் 2021 தினத்தன்று, அதிகாலையில், களுத்துரையில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியொன்றுக்கு, பொலிஸார் நுழைந்தனர். சரத் மற்றும் மஹேல என்போர் தப்பியோட முற்படும்போது கைதுசெய்யப்பட்டனர்.

சரத்தின் அறையிலிருந்த அலுமாரி ஒன்றிலிருந்து நகைகள் அடங்கிய பெட்டியொன்று பொலிஸாரினால் கண்டுப்பிடிக்கப்பட்டது. விசாரணையின் போது, சரத் மற்றும் மஹேல என்போர் நகைகள் அடங்கிய பெட்டி குறித்து தாம் எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் 11 ஆகஸ்ட் 2021 அன்று இரவு நேரத்திலேயே திருகோணமலையிலிருந்து தாங்கள் திரும்பி வந்ததாகவும் கூறினர்.

சரத் மற்றும் மஹேல என்போர் சார்பில் தோன்றும் வழக்கறிஞராக உம்மைக் கருதி, பின்வரும் விடயங்கள் தொடர்பில், விளக்கத்தின் போது எவ்வாறு விபரிப்பீர்களென 1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க , சான்றியல் கட்டளைச்சட்டத்தின் பொருத்தமான வாசகங்கள் மற்றும் வழக்குச்சட்ட ஆதாரங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

a. எண்பிக்கும் பொறுப்பு (33.3%)
b. ஊகங்கள் (33.3%)
c. சான்றொப்பளித்தல் (33.3%)

---

## பகுதி II

5) 19 ஜுலை 2021 தினத்தன்று, கடுமையான காயங்களுக்கு உள்ளான நபரொருவர் பேலியகொட பகுதியிலுள்ள ‘களு கம்பனி’ எனும் நிறுவனத்துக்கு சொந்தமான கொள்கலன் ஒன்றில் கண்டறிப்பட்டார். களு கம்பனியின் முகாமையாளர்கள் இத்தாக்குதலை தமது ஊழியனொருவனான சுனில் என்பவனே செய்திருக்ககூடுமெனச் சந்தேகிப்பதாகக் குற்றஞ்சாட்டினர். சுனில், ‘ரத்து வீதி’ எனப்படும் போதை பொருள் கொடுக்கல் வாங்கல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட விபச்சாரம் என்பவற்றுக்கு மோசமாக அறியப்பட்டதான பகுதியில் வாழ்கின்றான். சுனிலினுடைய வழக்கறிஞர்கள் அவனுக்கான முன்பிணையொன்றை வெற்றிகரமாக பெற்றிருந்தனர். 30 ஜுலை 2021 அன்று, களு கம்பனியிடமிருந்து தங்களது கொள்கலனொன்று திருட்டுப்போய் விட்டதென்பதான முறைப்பாடொன்றை பொலிஸார் பெற்றனர். 30 ஜுலை 2021 அன்று காலையில் சுனில் கொள்கலன் பகுதியினுள் நுழையும் போது, திடீரென எங்கிருந்தோ வந்த நான்கு பொலிஸ் அதிகாரிகள் அவனை நிலத்தில் தள்ளினர். மூன்று பொலிஸ் அதிகாரிகள் அவனது முகத்தை நிலப்பக்கமாக பிடிக்க ஒரு அதிகாரி கைவிலங்கைப் போட்டார். சுனில், “ஏன் என்னை கைது செய்கின்றீர்கள்? நீங்கள் என்னை கைது செய்யமுடியாது. எனக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது” எனக் கத்தினான். சுனில் பொலிஸ் கட்டுக்காவலுக்கு கொண்டுசெல்லப்பட்டதோடு, 2 ஆகஸ்ட் 2021 தினத்தன்று பி.ப 4.30 மணிக்கு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டான்.

சுனிலினுடைய வழக்கறிஞராகக் கருதி, சுனிலுக்கு கிடைக்கப்பெற வேண்டிய உரிமைகள் மற்றும் நிவாரணங்கள் தொடர்பில், இலங்கையின் கைது மற்றும் பிணை தொடர்பான பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குச்சட்ட ஆதாரங்காட்டி சுனிலினுக்கு ஆலோசனை வழங்குக.

(100% புள்ளிகள்)

6) “எந்த நபரும் குற்றஞ்சாட்டபடுவதான எந்த தனிப்பட்ட குற்றம் (distinct offence) ஒவ்வொன்றுக்கும் வேறுவேறுவான குற்றஞ்சாட்டுகை (charge) காணப்பட வேண்டுமெனும் பொதுக்கோட்பாட்டினை விளக்கும் போது, ‘தனிப்பட்ட குற்றம்’ எனும் வார்த்தைகள் அவை அதே தண்டனைக்குரிய வாசகத்தின் கீழ் வருகின்ற போதிலும் வேறுப்பட்ட சந்தர்ப்பங்களில் புரியப்பட்டதான குற்றங்களையும் உள்ளடக்குமெனத் தீர்க்கப்பட்டுள்ளது”

– Prof. G. L. Peiris, *Criminal Procedure in Sri Lanka*, p.198.

மேற்போந்த கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடபடிமுறை கோவையின் ஏற்பாடுகள் மற்றும் வழக்குச்சட்ட ஆதாரங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

(100% புள்ளிகள்)

*****